NOOLAHAM FOUNDATION

**நூலக நிறுவனம்**

**மாதாந்த அறிக்கை – மார்ச் 2018**

**வணக்கம்**

நூலக நிறுவனத்தின் 2018 மார்ச் மாத ஆவணமாக்கல் செயற்பாடுகள் தொடர்பான தகவல்களை உங்களுடன் பகிர்ந்து கொள்வதில் மகிழ்ச்சியடைகின்றோம்.

## எண்ணிம ஆவணவாக்கம் (Digital Preservation)

| வகை | எண்ணிக்கை | பக்கங்கள் |
|---|---|---|
| எழுத்தாவணங்கள் | 518 | 35,210 |
| பக்கம் தவறியவை | 7 | 646 |
| மொத்தம் | 525 | 35,856 |

## எண்ணிம நூலகம் (Digital Library)

- கொக்குவில் அலுவலக கிளையில் இம்மாதம் 471 ஆவணங்கள் 32,996 பக்கங்கள் ஆவணமாக்கப்பட்டுள்ளது.
- யாழ் பல்கலைக்கழக ஆவணவாக்கலில் இம்மாதம் 54 ஆவணங்கள் 2,860 பக்கங்கள் ஆவணமாக்கப்பட்டுள்ளது.
- ஆவணங்களுக்கான 300 பட்டியல் இணைக்கப்பட்டுள்ளது.
- ஆவணவாக்கலின் முக்கியம் கருதி பக்கம் தவறியவை மற்றும் சிதைந்தவைகளும் தொடர்ந்தும் ஆவணமாக்கப்படுகின்றது.

## சேகர அபிவிருத்தி (Collections Development)

இம் மாதம் கந்தப்பு நடராசா, செல்லக்குட்டி கணேசன், சசூலன், சிவபாலன், கைலைநாதர், ஜேசுராசா ஆகியோரது ஆவணங்களும் பரணூதரனால் கொண்டுவரப்பட்ட யா/இமையாணன் அ.த.க. வித்தியாலயம், யா/நெல்லியடி மத்திய கல்லூரி, உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷன் கல்லூரி, யா/சாவகச்சேரி இந்துக்கல்லூரி ஆகிய பாடசாலை ஆவணங்களும் மின்வருடப்பட்டுள்ளது. மேலும் யா/ திருக்குடும்பக் கன்னியர் மடம், தூய அந்தோனியார் ஆலயம் ஆகியவற்றின் ஆவணங்களும் மின்வருடப்பட்டுள்ளது. ஆவணங்களை பகிர்ந்து கொண்ட அனைவருக்கும் எமது நன்றிகள்.

## ஆவணவாக்க அனுமதிகள் (Rights Management)

மார்ச் மாதத்தில் கீழ்வருவோர் தமது வெளியீடுகளை ஆவணமாக்குவதற்கான அனுமதியினை பதிவுசெய்துள்ளனர்.

- வெளியீட்டாளர்கள்
    - J/ Imayanan G.T.M.Vidyalayam
    - J/ Nelliady Central college
    - J/ Holy Family Convent National School
    - Thamilar Thalam (paper)
    - J/ Kopay Christian College
    - J/ Koddady Namasivaya Vidyalayam
    - J/ Araly Hindu College
    - J/ Karainagar Hindu College
    - J/ Allaipiddy R.C.T.M. Vidyalayam
    - J/ Allaipiddy Parasakthy Vidyalayam
    - J/ Mankumban G.T.M. School
    - J/ Sanmarkka Maha Vidyalayam
    - J/ ST. Antony's College
    - J/ Naranthanai R.C.M. Vidyalayam
    - J/ Naranthanai Ganesha Vidyalayam
    - J/ Thambaddy G.T.M Vidyalayam

### காப்புப்படி (Backup)

53001-53700 வரையான ஆவணங்கள் அனைத்தும் வன்தட்டுக்களில் காப்புப்படி எடுக்கப்பட்டுள்ளது.

### Master-files and Applications Backup

இம்மாதம் எடுக்கப்படவில்லை.

### ஆவணகம் வலைத்தளம் (aavanaham.org)

ஆவணகம் (aavanaham.org) வலைத்தளத்தில் மார்ச் மாதம் கீழ்வரும் விடயங்கள் இணைக்கப்பட்டுள்ளன.

| வகை | எண்ணிக்கை |
|---|---|
| நூற்பட்டியல் | 01 |
| மேற்கோள்கள் | 06 |
| படங்கள் | 186 |
| குறுங்கால ஆவணம் | 88 |
| நிகழ்ப்படம் (காணொளிகள்) | 02 |
| எழுத்தாவணம் | 08 |
| தனி நபர் சேகரங்கள் | 03 |
| கையெழுத்தாவணம் | 66 |

**பயனர் சேவை (User Service)**

- எண்ணிம நூலக வலைத்தளத்தில் (www.noolaham.org) இம்மாதம் 21,259 பயனர்களால் 227,468 பக்கங்கள் பார்வையிடப்பட்டுள்ளன. இதனை 72.6% புது வாசகர்களும் 27.4% ஏற்கனவே உள்ள வாசகர்களும் பயன்படுத்தியுள்ளனர்.
- ஆவணக வலைத்தளத்தில் (aavanaham.org) இம்மாதம் 1,794 பயனர்களால் 13,092 பக்கங்கள் பார்வையிடப்பட்டுள்ளன. இதனை 83.7% புது பயனாளர்களும் 16.3% ஏற்கனவே உள்ள பயனாளர்களும் பயன்படுத்தியுள்ளனர்.

**ஆளணி (Human Resource)**

- இம் மாதம் 12 ஆம் திகதி நிதி மற்றும் நிர்வாக அலுவலகராக கார்த்திகா நியமிக்கப்பட்டுள்ளார்.

**செயற்றிட்டங்கள் (Projects)**

**1. EAP**

இம்மாதம் (பங்குனி மாதம்) EAP 1056 செயற்திட்டத்திற்கு அமைவாக கள ஆய்வாளர்களின் களாய்வு அடிப்படையில் கல்லியங்காடு, சுன்னாகம், தெல்லிப்பழை, மாவிட்டபுரம் ஆகிய இடங்களில் கிடைக்கப்பட்ட ஓலைச்சுவடிகள் சுத்தம் செய்யப்பட்டு 2000 சுவடிகள் எண்ணிமப்படுத்தப்பட்டது. சேகரிக்கப்படும் சுவடிகள் சுத்தம் செய்யப்பட்டு மாதத்திற்கு 2500 சுவடிகள் எண்ணிமப்படுத்துவது எமது இலக்காகும்.

**2. தொழிற்கலை ஆவணப்படுத்தல்**

இம்மாதம் (பங்குனி மாதம்) EAP 1056 செயற்திட்டத்திற்கு அமைவாக சிரட்டைக் கைத்தொழில் தொழிற்கலை, சிற்பி தொழிற்கலை, பனை ஓலை தொழிற்கலை ஆவணப்படுத்தப்பட்டது. சிரட்டையிலான கைப்பணி அலங்காரப்பொருட்களின் வேலைப்பாடு, பனையோலைசார் உற்பத்திப் பொருட்கள் தரவேற்றம் செய்யப்பட்டது. கிழக்கில் 04 மற்றும் வடக்கில் 06 களப்பணிகள் செய்யப்பட்டன..

**3. வாழ்க்கை வரலாற்று ஆவணப்படுத்தல்**

இம்மாதம் EAP 1056 செயற்திட்டத்திற்கு அமைவாக பங்குனி மாத கள ஆய்வில் 13 வாய்மொழி வரலாறுகள் பதிவுசெய்யப்பட்டன. கிழக்கில் 01 வாய்மொழி வரலாறு பதிவுசெய்யப்பட்டது.

**வழிகாட்டுநர் சபை (Regulatory Board)**

இம்மாதம் இரண்டு கூட்டங்கள் இடம்பெறுவதற்கு ஒழுங்கமைக்கப்பட்டன. அதற்கான இணைப்புக்கள்

- மார்ச் 11, 2018

https://docs.google.com/document/d/1AiBFkVV-HEpNYRVrCibd8Lsm-6klgAKGb7fWZw4rxfU/edit

- மார்ச் 25, 2018

https://docs.google.com/document/d/1zzX7ykd452l62c0ZctTBSpxXkdG9D6JeUwn95Btay8s/edit

**வரவு செலவு அறிக்கை (Financial Statement)**

- மார்ச் மாதத் தேவைகளுக்காக ரூ. 715,235.88 செலவானது. இதில் ஆளணியினருக்கான கொடுப்பனவுகள் ரூ. 165,800.00, தொடர்பாடல் ரூ. 9,182.68, மின்சாரம் ரூ. 2,875.20, வாடகை ரூ. 30,000.00, உபகரணங்களிற்கான செலவு (02 அலுமாரி) ரூ. 29,000.00, (வன்தட்டு) ரூ. 61,000.00 மற்றும் (கமரா) ரூ. 75,000.00, நிருவாகச் செலவு ரூ. 36,150.00, செயற்றிட்டச் செலவு ரூ. 253,525.00 (EAP ரூ. 144,000.00 மற்றையவை ரூ. 109,525.00) மற்றும் ஏனைய செலவுகள் ரூ. 52,703.02 ஆகியன உள்ளடங்குகின்றன.
- மார்ச் மாதம் இலண்டன் அன்பர்கள் ஊடாக ரூ. 326,700.00, கனடா அன்பர்கள் ஊடாக ரூ. 58,630.39 மற்றும் ஏனைய அன்பர்கள் ஊடாக ரூ. 16,600.00 நன்கொடையாகக் கிடைக்கப்பெற்றது.

இலாப நோக்கற்று இயங்கும் நூலக நிறுவனம் கொடையாளர்களின் நன்கொடையிலேயே இயங்கி வருகின்றது. அவ்வகையில் நன்கொடை வழங்கிய அனைவருக்கும் எமது நன்றிகள். தொடர்ந்தும் எம் பணிகளுக்கு உதவ வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறோம்.

நன்றி.